
தமிழ்நாடு அரசு

# வரவு – செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேடு 2025-2026

தமிழ்நாடு அரசு

# வரவு – செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேடு

## 2025-2026



சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி

(குறள் – 118)

சமநிலையில் நின்று, பொருளின் எடையை சீர்தூக்கிக் காட்டும்
துலாக்கோல் போல் எப்பக்கமும் சாயாமல் நேர்மையுடன்
நடுநிலை பேணுவதே சான்றோர்க்கு அழகு.

# வரவு – செலவுத் திட்டம் 2025-26

## தமிழ்நாட்டின் பொருளாதாரம்



| | |
|---|---|
| பரப்பளவு | 1.3 இலட்சம் சதுர கிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | 7.22 கோடி (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு) |
| பொருளாதாரம் | ரூ.35.67 இலட்சம் கோடி (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2025-26) |

## வரவு – செலவுத் திட்டத்தின் மொத்த மதிப்பு**

மொத்த வரவினங்கள்
ரூபாய் 3,32,330 கோடி



மொத்த செலவினங்கள்
ரூபாய் 4,39,293 கோடி



## மொத்த வரவினங்கள் மற்றும் மொத்த செலவினங்கள்

**பொதுக் கடன் நீங்கலாக

## மாநிலத்தின் வருவாயினங்கள்

2025-26 ஆம் ஆண்டுக்கான வருவாய் வரவினங்கள் 3,31,569 கோடி ரூபாயாக அரசு மதிப்பீடு செய்துள்ளது. மொத்த வருவாய் வரவினங்களில் 75.3 சதவீதம் மாநிலத்தின் சொந்த வருவாயாகும். மீதமுள்ள 24.7 சதவீதம் ஒன்றிய வரிகளில் பங்கு மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் ஆகும்.




**மாநிலத்தின் சொந்த வரி வருவாய்**

**ரூ.2,20,895 கோடி**




**மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்**

**ரூ.28,818 கோடி**



**ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

**ரூ.23,834 கோடி**




**மத்திய வரிகளில் பங்கு**

**ரூ.58,022 கோடி**

## மாநிலத்தின் சொந்த வரி வருவாய்

அரசின் சொந்த வரி வருவாய் 2025-26 ஆம் ஆண்டில் 14.6 சதவீதம் உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாயின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:-



## மாநிலத்தின் செலவினம்

2025-26 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்த செலவினங்கள் 4,39,293 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2024-25 (திருத்த மதிப்பீடுகள்) ஆம் ஆண்டை விட 9.95 சதவீதம் அதிகமாகும்.

## வருவாய்ச் செலவினம்


வருவாய்ச் செலவினத்தில் பெரும் பகுதி, பொது மக்களுக்கான, குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

### மொத்த வருவாய்ச் செலவினம்
### ரூபாய் 3,73,204 கோடி



ரூ.90,464 கோடி

சம்பளங்கள்



ரூ.16,972 கோடி

செயல்பாடுகளும் பராமரிப்புகளும்



ரூ.1,53,724 கோடி

உதவித் தொகைகளும் மானியங்களும்



ரூ.41,290 கோடி

ஓய்வூதியம் மற்றும் ஓய்வூகால பலன்கள்



ரூ.70,754 கோடி

வட்டி செலுத்துதல்

## மூலதனச் செலவினம்

மூலதனப் பணிகளுக்கு செலவிடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான உந்துதலை அரசு தொடர்ந்து அளித்து வருகிறது. 2025-26 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவு 57,231 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2024-25 (திருத்த மதிப்பீடுகள்) ஆம் ஆண்டை விட 22.4 சதவீதம் அதிகமாகும்.

### முக்கியத் துறைகளுக்கான மூலதனச் செலவினம்



சாலைகள் மற்றும் பாலங்கள்

ரூ.18,197 கோடி



போக்குவரத்து மற்றும் எரிசக்தி

ரூ.10,973 கோடி



நகர்ப்புற வளர்ச்சி

ரூ.6,292 கோடி



குடிநீர் வழங்கல் திட்டங்கள்*

ரூ.6,231 கோடி



நீர் நிலைகள்

ரூ.4,465 கோடி



கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

ரூ.3,851 கோடி


### மொத்த மூலதனச் செலவு 57,231 கோடி ரூபாய்

*திட்ட முகமைக்கு நேரடியாக வழங்கப்படும் தொகை உட்பட


## வருவாய்ப் பற்றாக்குறை

வருவாய்ப் பற்றாக்குறை இந்த ஆண்டு (2024-25 திருத்த மதிப்பீடு) 46,467 கோடி ரூபாயாகவும் மற்றும் அடுத்த ஆண்டில் (2025-26 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு) 41,635 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### வருவாய்ப் பற்றாக்குறையின் போக்கு ரூபாய் கோடியில்





### மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் வருவாய்ப் பற்றாக்குறையின் போக்கு விகிதம்




## நிதிப் பற்றாக்குறை

நிதிப் பற்றாக்குறை இந்த ஆண்டு (2024-25 திருத்த மதிப்பீடு) மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.26 சதவீதமாகும். அது அடுத்த ஆண்டில் (2025-26 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு), 3.00 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### நிதிப் பற்றாக்குறையின் போக்கு ரூபாய் கோடியில்





### மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் போக்கு விகிதம்





*எதிர்பாரா செலவு நிதிக்கு மாற்றம் செய்யப்பட்ட 350 கோடி ரூபாய் உட்பட

## ஒரு ரூபாய் எவ்வாறு திரட்டப்படுகிறது




## ஒரு ரூபாய் எவ்வாறு செலவிடப்படுகிறது



# 2025-2026 வரவு-செலவுத் திட்டத்தில் முக்கியத் துறைகள் சார்ந்த நிதி ஒதுக்கீடுகள்

கல்வி
ரூ.55,261 கோடி

நகர்ப்புர வளர்ச்சி
ரூ.34,396 கோடி

ஊரக வளர்ச்சி
ரூ.29,465 கோடி

மக்கள் நல்வாழ்வு
ரூ.21,906 கோடி

எரிசக்தி
ரூ.21,178 கோடி

நெடுஞ்சாலைகள்
ரூ.20,722 கோடி

# 2025-2026 வரவு-செலவுத் திட்டத்தில் முக்கியத் துறைகள் சார்ந்த நிதி ஒதுக்கீடுகள்

காவல்
**ரூ.13,342 கோடி**

போக்குவரத்து
**ரூ.12,965 கோடி**

நீர் வளம்
**ரூ.9,460 கோடி**

சமூக நலன்
**ரூ.8,597 கோடி**

தொழில்கள் மற்றும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள்
**ரூ.5,833 கோடி**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்
**ரூ.3,924 கோடி**

வருவாய்ச் செலவினம், மூலதனச் செலவினம் மற்றும் கடன் வழங்குதலைக் குறிக்கின்றது

# முக்கிய அறிவிப்புகள் - 2025-26

## மகளிர் நலன்

**பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் அசையாச் சொத்து ஆவணங்களுக்கு ஒரு சதவீதம் பதிவுக் கட்டணம் குறைப்பு**

(10 இலட்சம் ரூபாய் வரையிலான மதிப்புள்ள வீடு, மனை, விவசாய நிலம் உள்ளிட்ட அனைத்து அசையாச் சொத்துகள்)



**மகளிரை தொழில்முனைவோராக்கும் பெருந்திட்டம்**

**ரூ.225 கோடி**

(ஒரு இலட்சம் மகளிர், 20 சதவீத மானியத்துடன் 10 இலட்சம் ரூபாய் வரை வங்கிக் கடன் பெற்று, பல்வேறு தொழில்கள் தொடங்கிட உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் விற்பனைக்கான ஆலோசனைகள்)

---

## மாணவர்கள்

**கல்லூரிகளில் பயின்றுவரும் மாணவர்களுக்கு உயர் தொழில்நுட்பச் சாதனங்கள்**

**ரூ.2,000 கோடி**

(இரண்டு ஆண்டுகளில் 20 இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு)



---

## அரசு அலுவலர்கள்



**ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணப்பலன் பெறுவதற்கான நடைமுறை மீண்டும் செயலாக்கம்**

(15 நாட்கள் வரை ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணப்பலன்)

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## தமிழ் மொழி வளர்ச்சி



**திருக்குற**
**மொழி பெயர்ப்பு**

**ரூ.1.33 கோடி**

(45 உலக மொழிகள்)

**உலகத்தமிழ் ஒலிம்பியாட்**

**ரூ.1 கோடி**

---

## தொல்லியல், கலை, பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள்



**தொல்லியல் அகழாய்வு**

(தமிழகத்தில் 8 இடங்கள், பிற
மாநிலங்களில் 3 இடங்கள்)

**தொல்லியல் அருங்காட்சியகங்கள்**

**ரூ.43 கோடி**

(ஈரோடு மாவட்டத்தில் 'நொய்யல்' மற்றும்
இராமநாதபுரம் மாவட்டத்தில் 'நாவாய்')

**எழும்பூர் அருங்காட்சியகத்தில் ஐம்பொன் மற்றும்**
**செப்புத் திருமேனிகள் காட்சிக்கூடம்**

**ரூ.40 கோடி**

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## ஊரக வளர்ச்சி



ஊரகப் பகுதிகளில் கூடுதலாக ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டுதல்

**ரூ.3,500 கோடி**

ஊரகப் பகுதிகளில் பழுதடைந்த வீடுகளை மறுகட்டுமானம் செய்தல்

**ரூ.600 கோடி**

(25,000 வீடுகள்)

## நகர்ப்புர வளர்ச்சி

பழுதடைந்த நிலையில் உள்ள குடியிருப்புகளுக்குப் பதிலாக புதிய குடியிருப்புகளைக் கட்டுதல்

**ரூ.1,051 கோடி**

(5,256 குடியிருப்புகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக)

பருவநிலை மாற்றத்திலிருந்து மீட்கும் தன்மையுடைய மழைநீர் உறிஞ்சும் பல்லுயிர்ப் பூங்காக்கள்

**ரூ.88 கோடி**

(சென்னை பெருநகரப் பகுதியில் 7 பூங்காக்கள்)



முதல்வர் படைப்பகம்

**ரூ.150 கோடி**

(அனைத்து மாநகராட்சிகள்)

நதிக்கரை மேம்பாட்டுப் பணிகள்

**ரூ.400 கோடி**

(திருச்சி, மதுரை, ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகள்)

புதிய நகரம்

(சென்னைக்கு அருகில் புதிய நகரம் உருவாக்கம்)

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## குடிநீர் வழங்கல்



**புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்**

**ரூ.6,668 கோடி**

(7 மாவட்டங்களில்
28.82 இலட்சம் மக்கள்
பயன்பெறும் வகையில்)

**முதன்மைச்
சுற்றுக் குழாய் திட்டம்**

**ரூ.2,423 கோடி**

(சென்னை)

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை
மறுசீரமைத்தல்**

**ரூ.675 கோடி**

(102 திட்டங்கள்)

---

## நெடுஞ்சாலைகள்



**நான்கு வழித்தட உயர்மட்டச் சாலை**

**ரூ.2,100 கோடி**

(திருவான்மியூரிலிருந்து உத்தண்டி பகுதி
வரை 14.2 கி.மீ நீளத்திற்கு)

**ஒரகடம்-செய்யார் தொழில் வழித்தடம்**

**ரூ.250 கோடி**

**14 புறவழிச்சாலைகள் அமைத்தல்**

**ரூ.1,713 கோடி**

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## நீர்வளத் துறை

புதிய நீர்த்தேக்கம்

**ரூ.350 கோடி**

(சென்னைக்கு அருகில் அமைந்துள்ள கோவளம் உப வடிநிலத்தில்)



ஒருங்கிணைந்த நீர்வள மேம்பாட்டுத் திட்டம்

**ரூ.2,000 கோடி**

## பொதுப் போக்குவரத்து

4 வழித்தடங்களில் சென்னை மெட்ரோ இரயில் விரிவாக்கம் மற்றும் புதிதாக அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையினை ஒன்றிய அரசுக்கு சமர்ப்பித்தல்

டீசல் பேருந்துகளை இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் பேருந்துகளாக மறுசீரமைத்தல்

**ரூ.70 கோடி**

(700 டீசல் பேருந்துகள்)



இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம்

பன்முகப் போக்குவரத்து முனையம்

**ரூ.100 கோடி**

(சென்னையில் கிண்டி மற்றும் வண்ணாரப்பேட்டை)

மின் பேருந்துகள் அறிமுகப்படுத்துதல்

(1,125 மின் பேருந்துகள்)

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## சுற்றுச் சூழல்



வேட்டைப் பறவைகள் ஆராய்ச்சி அமைப்பு

ரூ.1 கோடி

கடல்சார் வள அறக்கட்டளை

₹ 50 கோடி

நீலக் கொடி சான்று பெறுதல்

ரூ.24 கோடி

(6 கடற்கரைகள்)

---

## எரிசக்தி



4,000 மெகாவாட் திறன் கொண்ட மின்கலன் சேமிப்பு அமைப்புகள்

நீரேற்றுப் புனல் மின் நிலையங்கள்

ரூ.11,721 கோடி

(வெள்ளிமலைப் பகுதியில் 1,100 மெகாவாட் திறன் மற்றும் ஆழியாறு பகுதியில் 1,800 மெகாவாட் திறன்)

---

## சமூகநீதி



அன்புச்சோலை

ரூ.10 கோடி

(25 இடங்களில் முதியோர் பகல் நேர பராமரிப்பு மையங்கள்)

இரண்டு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கு உதவித்தொகை

ரூ.120 கோடி

(மிகவும் வறிய நிலையில் உள்ள 50,000 குடும்பங்களுக்கு மாதம் ரூ.2,000/-)

பணிபுரியும் பெண்களுக்கான தோழி விடுதிகள்

ரூ.77 கோடி

(800 பெண்கள் பயனடையும் வகையில் 10 விடுதிகள்)

சென்னை, கோவை, மதுரையில் மாணவியர் விடுதிகள்

ரூ.275 கோடி

(தலா 1,000 மாணவிகளுக்கு)

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## பள்ளிக் கல்வி

**நான் முதல்வன்-கல்லூரிக்கனவு**

**ரூ.50 கோடி**

(அகில இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி உதவித் தொகையுடன் கூடிய படிப்பு வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு)



**பள்ளிக்கூடங்களில் உட்கட்டமைப்பு மேம்பாடு**

**ரூ.281 கோடி**

(கணினி ஆய்வகங்கள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன்மிகு வகுப்பறைகள்)

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

(3 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அரசு உதவி பெறும் நகர்ப்புற பள்ளிகளில் விரிவாக்கம்)

## உயர்கல்வி

**அண்ணா பல்கலைக்கழகத்தினை நாட்டிலேயே சிறந்த கல்வி நிறுவனங்களின் தர வரிசையில் முதல் பத்து இடங்களுக்குள்ளும், உலக அளவிலான QS தரவரிசைப் பட்டியலில் முதல் 150 இடங்களுக்குள்ளும் இடம் பெறச் செய்ய செயல்திட்டம்**

**ரூ.500 கோடி**

**அரசு பல்கலைக்கழகங்களுக்கு தொகுப்பு நிதி நல்கை உயர்த்துதல்**

**ரூ.700 கோடி**



**அடிப்படை அறிவியல் மற்றும் கணித ஆராய்ச்சி படிப்புகள்**

**ரூ.100 கோடி**

(சென்னை மற்றும் கோயம்புத்தூர்)

**நவீன தொழில்நுட்பப் படிப்புகளை அறிமுகம் செய்தல்**

**ரூ.50 கோடி**

(அரசு பொறியியல் கல்லூரிகளில் திறன்மிகு மையங்கள் உருவாக்குதல்)

**சென்னை அறிவியல் மையம்**

**ரூ.100 கோடி**

**புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்குதல்**

(10 மாவட்டங்களில்)

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## விளையாட்டு மேம்பாடு



பள்ளிப் பாடத்திட்டத்தில் சதுரங்க விளையாட்டினைச் சேர்த்தல்

---

## மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு



அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை தரம் உயர்த்துதல்

**ரூ.120 கோடி**

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்



நல்லிணக்க ஊராட்சிக்கான விருதுகள்

**ரூ.10 கோடி**

(10 ஊராட்சிகளுக்கு தலா 1 கோடி ரூபாய் ஊக்கத்தொகை)

பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கை

**ரூ.10 கோடி**

(பழங்குடியினரின் மரபுசார் அறிவினைப் பாதுகாத்தல் மற்றும் பயன்டுத்துதல்)

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டம்

**ரூ.65 கோடி**

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## தொழிலாளர் நலன்

**இருசக்கர மின் வாகனம் வாங்க மானியம்**
(2,000 இணையம் சார்ந்த சேவைப்பணித் தொழிலாளர்களுக்கு தலா 20,000 ரூபாய் மானியம்)



**17 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை நிறுவுதல்**

## தொழில் வளர்ச்சி

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 5 பொது வசதிமையங்கள்**
ரூ.50 கோடி
(தேனி, நாமக்கல், இராமநாதாபுரம், தஞ்சாவூர் மற்றும் சென்னை)

**தமிழ்நாடு செமி கண்டக்டர் இயக்கம்-2030**
ரூ.500 கோடி



**ஓசூரில் புதிய டைடல் பூங்கா**
ரூ.400 கோடி

**திருச்சியில் பொறியியல் மற்றும் வார்ப்பகத் தொழிற்பூங்கா**

**2 புதிய காலணி தொழிற்பூங்காக்கள்**
ரூ.250 கோடி
(மதுரை மற்றும் கடலூர்)

**விருதுநகரில் மினி டைடல் பூங்கா**

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாடு



9 புதிய தமிழ்நாடு சிறுதொழில் முன்னேற்றக் கழக தொழிற்பேட்டைகள்

**ரூ.366 கோடி**

---

## STARTUPS AND INFORMATION TECHNOLOGY




விண்வெளித் தொழில்நுட்ப நிதி

**ரூ.10 கோடி**

வியன் (Viyan) AVGC-XR Hub

**ரூ.50 கோடி**

(சென்னையில் திறன்மிகு மையம்)

---

## துணிநூல்



விசைத்தறி நவீனப்படுத்தும் திட்டம்

**ரூ.50 கோடி**

# புதிய அறிவிப்புகள் - 2025-26

## சுற்றுலா மேம்பாடு



**சுற்றுச்சூழல் பூங்கா**

**ரூ.70 கோடி**

(உதகமண்டலம் ரேஸ் கோர்ஸ் பகுதியில்)

**மாநிலத்தில் புராதனக் கட்டடங்களை பழமை மாறாமல் புதுப்பித்தல்**

**ரூ.150 கோடி**

(17 புராதனக் கட்டடங்கள்)

## மகளிர்



**10, 000 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

(ரூ.37,000 கோடி வங்கிக் கடன் )

**பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் ஒரு புதிய திட்டம்**

**ரூ.75 கோடி**

(சென்னை மற்றும் தமிழ்நாட்டின் இதர 4 நகரங்களில்)

## அரசு அலுவலர்கள் நலன்



**தாடண்டர் நகரில் அரசு அலுவலர்களுக்கு 190 'C' வகை குடியிருப்புகள்**

**ரூ.110 கோடி**

**காலிப்பணியிடங்களை நிரப்புதல்**

**40,000 பணியிடங்கள்**

## செயல்பாட்டில் உள்ள
## முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு



**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்**

**ரூ.13,807 கோடி**



**புதுமைப்பெண் திட்டம்**

**ரூ.420 கோடி**

அரசுப் பள்ளிகளில் பயின்று (6-12) தேர்ச்சி பெற்று உயர் கல்வி தொடரும் மாணவிகளுக்கு



**தமிழ்ப் புதல்வன்**

**ரூ.420 கோடி**

அரசுப் பள்ளிகளில் பயின்று (6-12) தேர்ச்சி பெற்று உயர் கல்வி தொடரும் மாணவர்களுக்கு



**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

**ரூ.600 கோடி**



**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்**

**ரூ.2,602 கோடி**



**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்**

**ரூ.3,676 கோடி**



**டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

**ரூ.1,092 கோடி**



**சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்**

**ரூ.5,156 கோடி**

முதியோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம் போன்றவை



**சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டம்**

**ரூ.4,807 கோடி**



**பொது விநியோகத் திட்டத்திற்கு மானியம்**

**ரூ.14,000 கோடி**

# செயல்பாட்டில் உள்ள முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு



கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்

**ரூ.2,000 கோடி**



நகர்ப்புரச் சாலை மேம்பாட்டுத் திட்டம்

**ரூ.550 கோடி**



பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை

**ரூ.1,455 கோடி**



கலைஞரின் கனவு இல்லம்

**ரூ.1,000 கோடி**



முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஊரகச் சாலைகள்

**ரூ.2,200 கோடி**



கலைஞரின் அனைத்து கிராமங்கள் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

**ரூ.202 கோடி**



அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II

**ரூ.500 கோடி**



ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

**ரூ.9,476 கோடி**



சென்னை எல்லைச் சாலை திட்டம்

**ரூ.2,910 கோடி**



சிங்காரச் சென்னை 2.0

**ரூ.850 கோடி**

# செயல்பாட்டில் உள்ள
# முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு



**அரசு மின் நிறுவனங்களுக்கு நிதியுதவி**

**ரூ.30,434 கோடி**

(வேளாண்மை, வீடுகளுக்கான மின் நுகர்வு உதவித்தொகை / பங்கு மூலதன உதவி / கடன்)



**தொழில் நிறுவனங்களுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு மானியம்**

**ரூ.2,420 கோடி**



**போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதியுதவி**

**ரூ.9,682 கோடி**

(மகளிருக்கு பேருந்துகளில் இலவச பயணச்சீட்டு, மாணாக்கர்களுக்கு இலவச பயணச்சீட்டு மற்றும் பயணச் சலுகை, டீசல் மானியம், நிரவல் நிதியுதவி, பங்கு மூலதன உதவி மற்றும் கடன்)



**பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்**

**ரூ.1,000 கோடி**

(அரசுப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள்)



**பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள்**

**ரூ.1,696 கோடி**

(பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், சீருடைகள், காலணிகள் மற்றும் மிதிவண்டிகள்)



**7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு வழங்கப்பட்ட அரசு பள்ளி மாணவர்களின் கல்விக் கட்டணம்**

**ரூ.550 கோடி**



**பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம்**

**ரூ.600 கோடி**

(திறன்மிகு வகுப்பறைகள், நவீன ஆய்வகங்கள், மின் பதிப்புகள் கொண்ட நூலகங்கள், மாணவர் விடுதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள்)



**பல்கலைக்கழகங்களுக்கு மானியங்கள்**

**ரூ.1,678 கோடி**

**நான் முதல்வன்**

**ரூ.150 கோடி**



**தேசிய சுகாதார குழுமம்**

**ரூ.2,754 கோடி**

# செயல்பாட்டில் உள்ள முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு

இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம்

**ரூ.100 கோடி**



தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் மருந்துகள் வழங்குதல்

**ரூ.559 கோடி**



முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

**ரூ.1,461 கோடி**



விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்

**ரூ.673 கோடி**



மாற்றுத் திறனாளிகள் நலன்

**ரூ.616 கோடி**

(கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை)



மீனவர் நலன்

**ரூ.538 கோடி**



தொல்குடி

**ரூ.255 கோடி**

பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாடு



அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம்

**ரூ.280 கோடி**

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருதல்



அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்

**ரூ.170 கோடி**

(ஆதிதிராவிட / பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்)



முதலமைச்சரின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவுத் திட்டம்

**ரூ.75 கோடி**

தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்



குறுங்குழும மேம்பாட்டுத் திட்டம்

**ரூ.50 கோடி**

# வரவு-செலவுத் திட்டம்-ஒரு கண்ணோட்டம்

ரூபாய் கோடியில்

| வ.எண் | வகைப்பாடு | 2023-24 கணக்குகள் | 2024-25 திருத்த மதிப்பீடு | 2025-26 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1. | மொத்த வருவாய் வரவுகள் | 2,64,597 | 2,93,906 | 3,31,569 |
| 2. | மொத்த வருவாய்ச் செலவினங்கள் | 3,09,718 | 3,40,374 | 3,73,204 |
| 3. | வருவாய்ப் பற்றாக்குறை | 45,121 | 46,467 | 41,635 |
| 4. | மூலதனச் செலவினங்கள் | 40,500 | 46,766 | 57,231 |
| 5. | நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் | 4,821 | 8,473* | 8,102 |
| 6. | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறையின் விகிதம் | 3.32 | 3.26* | 3.00 |
| 7 | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிலுவைக் கடன் விகிதம் | 26.63 | 26.43 | 26.07 |
| 8. | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி | 27,21,571 | 31,15,998 | 35,67,818 |

*எதிர்பாரா செலவு நிதிக்கு மாற்றம் செய்யப்பட்ட 350 கோடி ரூபாய் உட்பட

# சொற்களஞ்சியம்

**அ) வருவாய் வரவினம்**

மாநில அரசு விதிக்கும் வரிகள் மற்றும் தீர்வைகள், கட்டணங்கள், அபராதங்கள் ஆகியவற்றின் கீழ் பெறப்படும் மொத்த வருவாய் மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படுபவை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**ஆ) வருவாய்ச் செலவினம்**

சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வூதியப் பலன்கள், செயல்முறைகள் மற்றும் பராமரிப்புச் செலவினம், நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்காக அளிக்கப்படும் மானியங்கள் மற்றும் நல்கைகள் மற்றும் பல செலவினங்கள் இதில் அடங்கும்.

**இ) மூலதனச் செலவினம்**

சாலைகள் மற்றும் பாலங்கள், பாசன அமைப்புகள், பள்ளி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துக்களை உருவாக்குவதற்காகவும், பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கும் மேற்கொள்ளப்படும் செலவினம் மூலதனச் செலவினமாகும்.

**ஈ) கடன்கள் மற்றும் முன் பணங்கள்**

மாநில பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிற்கு அரசு வழங்கும் தொகைகள் கடன் செலவினமாகும். அத்தகைய நிறுவனங்களிடமிருந்து திரும்பப் பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் கடன் வரவினமாகக் கருதப்படும்.

**உ) வருவாய் உபரி / வருவாய்ப் பற்றாக்குறை**

வருவாய்ச் செலவினத்தைக் காட்டிலும் வருவாய் வரவினங்கள் மிகையாக இருப்பின், அது வருவாய் உபரி எனப்படும். வருவாய் வரவினங்களைக் காட்டிலும் வருவாய்ச் செலவினம் மிகையாக இருப்பின், அது வருவாய்ப் பற்றாக்குறை எனப்படும்.

**ஊ) நிதிப் பற்றாக்குறை**

மொத்த வரவினங்களுக்கும் (அதாவது வருவாய் மற்றும் மூலதன வரவினங்கள்) மற்றும் மொத்தச் செலவினங்களுக்கும் (அதாவது வருவாய்ச் செலவினம் மற்றும் அரசு வழங்கும் நிகரக் கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட மூலதனச் செலவினம்) இடையேயுள்ள வேறுபாடு நிதிப் பற்றாக்குறை எனப்படும்.

**குறிப்பு:** அனைத்து வரவு-செலவுத் திட்ட ஆவணங்களையும் கீழ்காணும் இணையத்தின் வாயிலாக பார்க்கவும் / பதிவிறக்கவும் இயலும் https://financedept.tn.gov.in

நிதித் துறை,
தமிழ்நாடு அரசு,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009.

நிதித் துறை
தமிழ்நாடு அரசு
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

Website : https://www.financedept.tn.gov.in